# பிறவி ஊனமா? இனி கவலை வேண்டாம்

## கே.எம்.சி.எச்.சில் நவீன சிகிச்சை முறை

கோவை, ஆக.3: பிறந்த குழந்தையை ஒரு கை தேர்ந்த மருத்துவர் வாயிலாக முழு பரிசோதனை செய்யும் பட்சத்தில் பல வகையான உடல் ஊனங்களை ஆரம்பத்திலேயே கண்டறியலாம். அப்படி கண்டறியும் பட்சத்தில் எளிதான சிகிச்சை அளிப்பதன் மூலம் பெரும்பாலான நோய்களை முழுமையாக குணப்படுத்தி விடலாம். பெற்றோர்களுக்கு போதிய விழிப்புணர்வு இன்மையின் காரணமாகவே பல குழந்தைகள் தங்கள் வாழ்க்கையை ஊனமாகவே கழிக்க வேண்டிய சூழல் நிலவுகின்றது என்று தெரிவிக்கிறார் குழந்தைகள் நல எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர் சிறுமுகை டாக்டர் லெனின் பாபு.



தலை பிரசவத்தின் போது கருவறையில் போதிய இடம் இல்லாமல் இருக்கும் காரணத்தால் சில குழந்தைகள் பாதம் வளைந்த நிலையில் பிறக்கின்றன. இதை கருவில் உள்ள போதே அல்ட்ரா சவுண்ட் என்ற கருவியின் மூலம் சரியாக கண்டறிய முடியும். எந்த அறுவை சிகிச்சையும் இல்லாமல் பொன்செட்டி என்ற நூதன சிகிச்சை முறையை குழந்தை பிறந்த முதல் வாரத்திலேயே ஆரம்பிப்பதன் மூலம், சில நூறு ரூபாய்களே ஆன மாவுக்கட்டின் வாயிலாகவே உங்கள் குழந்தையின் கால்களை 6 வாரத்தில் சரி செய்து விடலாம்.

பிறப்பதற்கு, சற்று முன்னதாகவோ, அல்லது பிறக்கும் போதோ, பல்வேறு காரணங்களால் மூளைக்கு செல்லும் ஆக்சிஜன் குறைவதால், மூளையில் ஒரு பகுதி செயலிழந்து, சில குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றிய நிலையில் பிறக்கின்றன. நாளடையில் இவர்களுடைய கை, கால்களில் உள்ள தசை நார்களில் பிடிப்பு ஏற்பட்டு இவர்களால் சரியான முறையில் நடக்கவோ அல்லது ஓடவோ முடியாத நிலை ஏற்படுகிறது. இது போன்ற நடையினால் நிலை தடுமாறி கீழே விழுந்து எலும்பு உடையும் அபாயம் இருக்கின்றது. இது போன்ற குழந்தைகளுக்கு, சரியான அறுவை சிகிச்சை அளிப்பதின் மூலம் அவர்களை ஏறக்குறைய இயல்பாக நடக்க வைக்க முடியும். அது போலவே பிறந்த குழந்தையின் இடுப்பு மூட்டை ஆய்வு செய்வதின் மூலம் மூட்டு விலகி உள்ளதா? என்ற மிகச் சிக்கலான பிரச்சினையை மிகச் சுலபமாக கண்டறியலாம். இது வெள்ளைக்கார குழந்தைகளிடையே 1000–க்கு 4–5 இருந்தாலும், நம் நாட்டில் 1000–க்கு ஒன்று என்ற கணக்கில் காணப்படுகிறது. பிரச்சினையை பிறந்த உடனே கண்டறியும் பட்சத்தில் மிக குறைந்த செலவில் பாவ்லிக் ஹார்னஸ் என்ற தொட்டிலில் போடுவதின் மூலம் இதை முழுமையாக குணப்படுத்தலாம்.

சில குழந்தைகள் வளரும் போது, பல்வேறு விதமான உடல் கோளாறுகளால் கால்கள் குட்டை –நெட்டையாக வளர்வது உண்டு. இது நாளடைவில் குதியைத் தூக்கி கொண்டு விந்தி விந்தி நடக்க வழி செய்கிறது. பிற்காலத்தில் இது இடுப்பு வலியையும் உண்டாக்கும். இதை நவீன சிகிச்சை முறையின் மூலம் ஒவ்வொரு காலையும் 10–லிருந்து 15 செ.மீ வரை நீண்டு வளர வைக்க முடியும். இதையும் வெற்றிகரமாக கே.எம்.சி.எச்.சில் செய்து வருகிறோம்.

இது குறித்து குழந்தைகள் நல அறுவை சிகிச்சை நிபுணர் சிறுமுகை டாக்டர் லெனின் பாபு மேலும் கூறியதாவது,

சில குழந்தைகள் காரணமே இல்லாமல் அடிக்கடி தடுக்கி விழுவார்கள். பாதங்கள் வெளிப்புறமாக பார்ப்பதற்கு பதில் உள்புறமாக பார்த்து இருக்கும். சம்மனங்கால் போட முடியாமல், வீர மண்டி போட்டே உட்காருவார்கள். தொடை எலும்பில் ஒரு அறுவை சிகிச்சை செய்வதின் மூலம் இதை சரி செய்துவிடலாம்.

இது போலவே முட்டி கோணலான பிரச்சினைகளை ஹெமி எபிபைசியோடீசிஸ் என்ற எளிய முறையின் மூலம் சரி செய்து ஒரே நாளில் வீட்டிற்கு அனுப்பி விடலாம். இதை கவனிக்காமல் விடும் பட்சத்தில் பெரிய ஆபரேசன் செய்ய வேண்டியிருக்கும்.

வாத்துக்கால், குவிந்த கால் போன்ற பல வகையான நோய்கள் குழந்தை பருவத்தில் வருவதுண்டு, இதை சில மருத்துவர்களே போதிய அனுபவமின்மையால் வளர வளர சரியாக போய்விடும் என்று தவறாக அனுமானித்து பிரச்சினை பெரிதானவுடன் தான் எங்களிடம் அனுப்பி வைப்பார்கள். நம் நாட்டில் குழந்தைகளுக்கு என எலும்பு, மூட்டு அறுவை சிசிச்சை நிபுணர்கள் குறைவு. பொதுமக்கள் மற்றும் மருத்துவர்கள் அதைப் போன்ற நிபுணர்களை அறிந்து கொள்வதின் மூலம் குழந்தைகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை பெற உதவி செய்யலாம்.

இவ்வாறு சிறுமுகை டாக்டர் வி.லெனின்பாபு கூறினார்.